*செய்தி வெளியீடு எண் :01* *நாள் :01.09.2019*

**தேனி மாவட்டம்**

***வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2020-ஆண்டிற்கான முன்சுருக்க திருத்தப்பணிகள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்:-***

******

*தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2020 –ஆண்டிற்கான முன்சுருக்கத் திருத்தப்பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், துண்டு பிரசுரங்களை இன்று (01.09.2019) வெளியிட்டார்.*

***இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் தெரிவிக்கையில்,***

*இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, 01.01.2020 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம்-2020 நடைபெறவுள்ளதையொட்டி அதன் முன்சுருக்கத் திருத்தப்பணியாக 01.09.2019 முதல் 30.09.2019 வரை வாக்காளர் சரிபார்ப்பு திட்டப் பணிகள் நடைபெறவுள்ளது.*

*தேனி மாவட்டத்தில் 1,218 வாக்கு சாவடி மையங்களும், 10,68,603 வாக்காளர்களும் உள்ளனர். வாக்காளர்கள் சரிபார்ப்பு பணியின் போது வீடுவீடாக சென்று வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளர்களின் விபரங்களை சரிபார்க்க 1,218 வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*சரிபார்க்க வருகை தரும் அலுவலர்களிடம் பொது மக்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய கடவு சீட்டு, ஓட்டுநர் உரிமம், ஆதார், குடும்ப அட்டை, பான் கார்டு, Register General of India - தேசிய மக்கள் தொகை பதிவேடு - ன் கீழ் வழங்கப்பட்ட ஸ்மார்ட் கார்டு, தற்போதுள்ள தொலைபேசி கட்டணம் / மின் கட்டணம் / எரிவாயு கட்டணம் ரசீதுகள், ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆவணத்தை அளித்து தங்களது வாக்காளர் விவரம் சரியாக உள்ளதா என சரிபார்த்து கொள்ளலாம்.*

*பொது மக்கள் அவர்களுடைய வாக்காளர் தொடர்பான விரங்கள் குறித் உறுதி செய்து கொள்ள மேற்கண்ட ஆவணங்கள் ஏதேனுமொன்றை கொண்டு வாக்காளர் உதவி செயலி (Voters Help line APP) தேசிய வாக்காளர் சேவை திட்ட இணையதளம் (www.nvsp.in) பொது சேவை மையங்கள் (Common Service Centre) வாக்காளர் சேவை மையம் (Voter Facilitation Centre) சேவைகள் மூலமாக பதிவு விவரங்களை உறுதி செய்து கொள்ளலாம்.*

*சுருக்கத்திருத்தப்பணிகள் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (Integrated Draft Roll) 15.10.2019 அன்றும், கேட்பு மற்றும் ஆட்சேபளைகளை அளிப்பதற்கான கால அளவு 15.10.2019 முதல் 30.11.2019 வரையும், சிறப்பு முகாம்கள் 02.11.2019 மற்றும் 03.11.2019, 09.11.2019 மற்றும் 10.11.2019 ஆகிய நாட்களிலும், மனுக்களின் ஏற்பு / தள்ளுபடி குறித்து வாக்காளர் பதிவு அலுவலரின் இறுதி அறிக்கை 15.12.2019 அன்றும், ஆரேக்கியமான வாக்காளர் பட்டியலின் காரணிகள் குறித்து மேற்கொள்ளும் பணி 25.12.2019 அன்றும், தரவுதளங்களை மேம்படுத்துதல் பதிவேற்றம் செய்தல் மற்றும் துணை வாக்காளர் பட்டியல் அச்சிடும் பணி 31.12.2019 அன்றும், இறுதி வாக்காளர் பட்டியல் 01.01.2020 முதல் 15.01.2020-க்குள் வெளியிடப்படும்.*

*01.01.2020-அன்று தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்களும் படிவம்-6 மூலம் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். நீக்கம் / இறப்பு / இடம்பெயர்ந்தோர் ஆகிய இனங்களுக்கு கண்டிப்பாக படிவம்-7 அளிக்க வேண்டும். பெயர், முகவரி, உறவு முறை, பிறந்த தேதி, புகைப்படம் (தெளிவாக உள்ளதா?).திருத்தம் தொடர்பாக படிவம்-8 அளிக்க வேண்டும். ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம் எனில் படிவம் 8A அளிக்க வேண்டும். தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்காளர்களும் தங்களது பகுதியில் வாக்காளர் சரிபார்க்கும் பணிக்கு வருகை தரும் அலுவலர்களிடம் சரியான விவரங்களை அளித்து 100% வாக்காளர் பட்டியலினை செம்மைபடுத்த முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டும்*

*மேலும், வாக்காளர் பட்டியல் தொடர்பாக கள ஆய்விற்கு செல்லும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.*

*கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, உத்தமபாளைம் சார் ஆட்சியர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்பிரித்தா, வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***